## நேரடிக் கவனிப்புச் சிகிச்சை உதவியுடன் உங்கள் மருந்துகளை ஒவ்வொரு நாளும் உட்கொள்ளவும்

## நேரடிக் கவனிப்புச் சிகிச்சை இலவசமானது

## காசநோயைத் தடுக்கவும் குணப்படுத்தவும் முடியும்

நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், உங்கள் தாதியை அல்லது நேரடிக் கவனிப்புச் சிகிச்சைப் பணியாளரை அழைக்கவும்:

---

வடக்குப் பிராந்தியம்....................416-338-8380
தெற்குப் பிராந்தியம்....................416-392-7457
கிழக்குப் பிராந்தியம்....................416-338-7492
மேற்குப் பிராந்தியம்....................416-338-1521

targettb@toronto.ca

416.338.7600
toronto.ca/health
TORONTO Public Health

PH0506GB077 (Tamil)
November 2011

# காசநோய்க்குப் பரிகாரம்

# நேரடிக் கவனிப்புச் சிகிச்சை

# (நேரடிக் கவனிப்புச் சிகிச்சை)

**Curing Tuberculosis with Directly Observed Therapy (DOT)**
**Tamil**



416.338.7600
toronto.ca/health
TORONTO Public Health

## நேரடிக் கவனிப்புச் சிகிச்சை (டி.ஓ.ரி) என்றால் என்ன?

- டி.ஓ.ரி. என்பது நேரடிக் கவனிப்புச் சிகிச்சை.
- இது காசநோயைக் குணப்படுத்த உதவும்.
- நீங்கள் காசநோய் மருந்துகளை ஆறு மாதங்களுக்கு அல்லது மேற்பட்ட காலப்பகுதிக்கு உட்கொள்வீர்கள்.
- நேரடிக் கவனிப்புச் சிகிச்சைப் பணியாளர் ஒருவர் உங்களை வந்து சந்தித்து நீங்கள் காசநோய் மருந்துகளை உட்கொள்வதற்கு உதவுவார்.
- **நேரடிக் கவனிப்புச் சிகிச்சை இலவசமானது.**

## நேரடிக் கவனிப்புச் சிகிச்சைத் திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

நேரடிக் கவனிப்புச் சிகிச்சைப் பணியாளர் ஒருவர்:

- உங்கள் அகத்துக்கு அல்லது வேறிடத்துக்கு வந்து உங்களைச் சந்திப்பார்.
- உங்கள் சிகிச்சை முடிவடையும் வரை ஒரு கிழமைக்கு கிட்டத்தட்ட ஐந்து தடவைகள் உங்களை அவர் சந்திப்பார்.




## உங்கள் நேரடிக் கவனிப்புச் சிகிச்சைப் பணியாளரால் உங்களுக்கு என்னென்ன உதவிசெய்ய முடியும்?

நீங்கள் காசநோய் மருந்துகளை உட்கொள்ளும் காலப்பகுதியில் உங்கள் நேரடிக் கவனிப்புச் சிகிச்சைப் பணியாளர்:

- பக்க விளைவுகளைக் கவனிப்பார்.
- நீங்கள் சரிவர மருந்துகள் உட்கொள்வதற்கு உதவுவார்.
- உங்கள் சிகிச்சை முடிவடையும் வரை உங்களுக்குத் துணைநின்று உதவுவார்.
- உங்கள் காசநோய் மருத்துவரைச் சந்திப்பதற்கு நாள்நேரம் குறித்து உதவுவார்.
- வேறு அலுவல்களுக்கும் உதவுவார்.

## நீங்கள் உங்கள் காசநோய் மருந்துகளை ஒவ்வொரு நாளும் உட்கொள்வது ஏன் முக்கியமானது?

- நீங்கள் ஒவ்வொரு நாளும் மருந்துகள் உட்கொள்வது காசநோயைக் குணப்படுத்த உதவும்.
- நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்கள் காசநோய் மருந்துகளை உட்கொள்ளா விட்டால், காசநோய்க் கிருமிகள் மீண்டும் வளரக்கூடும். அதனால் நோயைக் குணப்படுத்துவது மேலும் கடினமாகலாம்.
- காசநோய்க் கிருமிகளை முற்றுமுழுதாகக் கொல்வதற்கு நீண்ட காலம் செல்லும். ஆகவே நீங்கள் உடல்நலம் தேறும்பொழுதும் உங்கள் காசநோய் மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்வது மிகவும் முக்கியம்.